# புதுக்கவிதையில் கவிஞர்களின் சமுதாய பாங்கு

**முனைவர் ப. பிரியதர்ஷினி**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**சூலூர் - கோயம்புத்தூர். Priyaarundharshini16@gmail.com**

65

**ஆய்வுச்சுருக்கம்**

புதுக்கவிதை என்பது இலகுவாக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கவிதைக்குரிய மரபு, இலக்கணம் அற்ற ஒரு கவிதை முறையாக நோக்கப்படுகிறது. மரபுக்கவிதை சீர், அடி, தொடை எனும் கட்டுப்பாடுகளைக் கொண்டது. புதுக்கவிதை அவற்றை புறம்தள்ளியதாக அமைந்துள்ளது. மரபுக்கவிதை, புதுக்கவிதை என கவிதை இலக்கியங்கள் மாற்றம் அடைந்த சூழலில் வேறு பல புதிய இலக்கிய வகைமைகளும் தோன்றின. படைப்பு என்பதை படைப்பாளன் மட்டும் தீர்மானிப்பதில்லை. இச்சமூகத்தில் வாழ்கின்ற அவன்காணும் சமூக நிகழ்வுகள் அவனுள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவற்றிலிருந்து அவன் அவனுக்கான இலக்கியத்தைப் படைக்கின்றான்.

அதே சமயம் அவனுடைய சமூகத்தில் நிகழ்கின்ற சமூக அரசியல் மாற்றங்கள் அவற்றின் மரபார்ந்த போக்குகளில் ஒரு சில மாற்றங்களைத் தருகின்றன. இந்தியாவில் ஏற்பட்ட ஆங்கிலேய ஆட்சி மிகச் சிறந்த உதாரணம் ஆகும். இங்கு வந்த ஆங்கிலேயர்கள் அவர்களது இலக்கிய வடிவங்களை இங்கு அறிமுகப்படுத்தினர். அதன்தாக்கம் இங்கிருந்த படைப்பாளிகளின் படைப்பு மரபை சற்று மாற்றியது. இம்மாற்றம் படைப்பின் வாசகனுக்குத் தேவையானதாக இருக்க, அம்மாற்றமே நிலையானதாகிவிட்டது.

**கடவுச் சொற்கள்**

கவிதை, ஆளுமை, மரபு, புத்தகங்கள், தமிழ்மொழி, சிந்தனை

**உபதலைப்புகள்**

புதுக்கவிதைகள் - புதுக் கவிஞர்களின் படைப்புலகம் - பா. விஜயின் படைப்பாக்க ஆளுமை - பழநிபாரதியின் படைப்பாக்க ஆளுமை

**முன்னுரை**

ஒரு கவிஞனின் ஆளுமையானது அவனது சமூகத்தில் நிகழ்கின்ற சமூக அரசியல் மாற்றங்கள் அவற்றின் மரபார்ந்த போக்குகளில் ஒரு சில மாற்றங்களைத் தருகின்றன. பாடுபொருள், பாடலாக்க உத்தி என்பதாக காலங்கள் தோறும் கவிதைகளும் வளர்ந்து வருகின்றன. கால ஓட்டத்தில் பல்வேறு மாற்றங்களை அடைந்து வரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதைகளுக்கான தேவைகள் இருந்து கொண்டே இருக்கின்றன. ஓரளவு மொழி அறிவு பெற்று கவிதைகளாக ஈர்க்கப்பட்டவர்களும் கவிதை புனைய முனைவதும் அவர்களும் கவிதைப் புத்தகங்களை வெளியிடுவதும் என்பதாக தமிழ்க் கவிதை

மரபு பெருகி வருகிறது. நல்ல படைப்புகள் மட்டுமே பேசப்படுகின்றன. அடுத்தடுத்த நிலைகளுக்குச் செல்கின்றன என்றாலும் பலரின் முயற்சிகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன.

சாதாரண வாசகனையும் ஈர்க்கவேண்டிய அல்லது சாதாரண மக்களுக்கு விளங்கவேண்டிய கருத்துக்களை எளிதில் புரிவதற்கு இப்படைப்பாக்க முறைகள் பெரிதும் பயன்பட்டன. பழங்கவிதைகளை உரையாசிரியார்கள் இன்றி படிக்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாத சூழலில், புதிய கவிதையாக்க மரபு பெரிதும் தேவைப்பட்டது அத்தேவையே புதுக்கவிதையாக்கத்தை வளர்த்து எடுத்தது. பல கவிஞர்கள் தங்களுக்கே உரிய முறையில் அப்படியான படைப்புகளையே தந்து வருகின்றனர்.

**புதுக்கவிதைகள்**

எல்லா இலக்கியங்களும் ஏதோ நோக்கத்தோடு படைக்கப்படுகின்றன. இலக்கு+இயம் இலக்கினை இயம்புவதே இலக்கியம் எனும் கோட்பாடு நம் சமூகத்தின் அடிப்படை இலக்கிய கோட்பாடு ஆகும். மானுட வாழ்விற்கான நோக்கத்தைச் சுட்டி, அதனுள் உண்டாகும் பல்வேறு சிக்கல்களைக் காட்டி அதைத்தடுக்கும் வழிமுறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும். இவ்வாறான செயல்பாடுகளுடன் தொடர்ந்து இலக்கியங்களே மக்களுக்குப் பயனுடையதாக விளங்கி போற்றப்படும் தமிழ் மொழி அவ்வாறான பல இலக்கியங்களை, இலக்கிய வகைமைகளைக் கொண்டது.

யாதும் ஊரே யாவரும் கேளீர் எனச் சொல்லி உலகில் உள்ள அனைத்து மனிதர்களுக்காகவும் வாழ்வியல் முறைகளைச் சொன்ன சங்க இலக்கியங்கள், அறம், பொருள், இன்பம் எனும் மூவகைப் பொருள்களைத் தந்து உலக மானுடம் காத்த திருக்குறள் போன்றவை நல்ல நோக்கத்தோடு படைக்கப்பட்டவை என்பது திண்ணம். புதிய மாற்றங்களோடு எல்லா மனிதர்களுக்கானதாகவும் எல்லா மனிதர்களையும் உள்ளடக்கிய எளிமையான சாதாரண மனிதர்களின் வாழ்வைப் பேசி, பதிவு செய்து மாறுதல்களை ஏற்படுத்த வேண்டிய பணியைத் தமிழ்ப் புதுக்கவிதைகள் தவறாது செய்து வந்துள்ளன.

**“ஏழை என்றும் அடிமை என்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்**
**இழிவு கொண்ட மனிதர் என்பது**
**இந்தியாவில் இல்லையே”**[1]

என்ற பாரதியின் சமூக விடுதலையோடான நாட்டு விடுதலையின் நோக்கம் அவரின் பல கவிதைகளில் வெளிப்படுகின்றன.

**“புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்”**[2]

என்ற பாவேந்தரின் கவிதை வரிகள் சமூகச் சிக்கலை எதிர்த்து மனிதர்களுக்கான மனிதர்கள் வாழ்வதற்கான பூமி வேண்டும் எனும் நோக்கத்தில் பதிவு செய்கின்றது.

**புதுக் கவிஞர்களின் படைப்புலகம்**

பாரதி, பாரதிதாசன் உள்ளிட்ட எண்ணற்ற பல கவிஞர்கள் தமிழ்ப் புதுக்கவிதைகளில் பல்வேறு சமூகச் சிந்தனைகளை முன்னெடுத்தனர்.

**“பொம்மைகள் தயாரிக்க**
**கருப்பையை**
**நசுக்காதீர்கள்**
**மெசியாவின் கரங்களில்**
**ஒட்டடைக் கோலைத்**
**திணிக்காதீர்கள்”[3]**

என மரபு சார்ந்த செயல்பாடுகளை எதிர்த்துப் பெண்களுக்கான உரிமைகளுக்காகப் போர்குரல் எடுக்கிறது இந்தப் புதுக்கவிதை,

**“எங்கள் அடுப்பில்**
**எரியாத நெருப்பு**
**எங்கள் வயிற்றில்**
**எரிந்து கொண்டுள்ளதை**
**நீ அறிவாயா?”[4]**

என்ற எம்.ஏ. நுஃமானின் படைப்பு வறுமையின் வேதனையைப் பறைசாற்றுகின்றது. இது போன்ற புதுமைச் சிந்தனைகளைப் புகுத்தி சமூகத்தைச் சீராக்கும் பல புதிய படைப்புகள் புதுக்கவிதையில் வந்தன.

சமூக அவலங்களைக்காட்ட கடவுளையே கேள்வி கேட்டும் பல கவிதைகளும் வெளிவந்தன. அதன் மூலம் சமூக ஏற்றத் தாழ்வுகள் நீங்கும் நோக்கம் நிறைந்திருந்தது.

**“எந்நாடு போனாலும்**
**தென்னாடு உடைய சிவனுக்கு**
**மாத விலக்கான பெண்**
**ஆகாது”[5]**

எனும் கவிஞர் கனிமொழியின் கவிதை பெண்களுக்கான உரிமைகளைப் பேசும் வகையில் இருந்தது. பெண்களில் உடலியல் சார்ந்த மாற்றங்களினால் அவள் ஒதுக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றது.

**“மதுரை நாயகியே**
**மீனாட்சித் தாயே**
**உன்னருகே ஓடிவரும்**
**உன் மகளை**
**உன் மகனே**
**வழி வம்பு செய்கிறான்**

**கோயிலிலும் காப்பில்லை**

**உன் காலத்தில்**

**அழகி நீ எப்படி**

**உலாப் போந்தாய்”[6]**

எனும் இரா. மீனாட்சியின் கவிதை பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைக் கேள்வி கேட்கிறது. கோவில்கூட பாதுகாப்பாக இல்லாத நிலையைப் பதிவு செய்து கேலி செய்கிறது.

**“காய்ஞ்சி கெடக்குதுன்னு**

**கடவுளுக்கு மனு செஞ்சா**

**பேய்ஞ்சி கெடுத்துச்சே**

**பெருமாளே என்ன பண்ண”[7]**

என்னும் வைரமுத்துவின் வரிகள் இயற்கையின் அமைப்பையும் அந்த இயற்கையை நம்பி வாழ்விழந்த ஏழை விவசாயின் வாழ்வாக்கத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

**“இது குழந்தைகள் ஆண்டு**

**அதனால்**

**எங்கள் குழந்தைகள்**

**கலர்தாள் மட்டுமே பொறுக்கும்**

**கழலாகக் மட்டுமே கடிக்கும்**

**புது பூட்ஸ் மட்டுமே துடைக்கும்”[8]**

என்ற அரசு மணிமேகலையின் கவிதையும் ஏழ்மையின் பக்கங்களைப் பதிவு செய்கின்றது.

தனிமனித கொடுமைகள் மட்டுமின்றி அரசியல் கொடுமைகளையும் புதுக்கவிதைகள் பாடுகின்றன. அப்படியான ஒன்றை பொன் செல்வ கணபதி அவர்கள் தமது கவிதையில்,

**“சென்னை**

**ஒரு**

**தலைநகரம் மட்டுமல்ல**

**சிலை நகரமும் கூட இங்கே**

**உழைப்பாளர்கள்**

**சிலையில் கூட**

**உழைத்துக் கொண்டுதான்**

**இருக்கிறார்கள்**

**தலைவர்கள்**

**சிலையில் கூடப்**

**பேசிக் கொண்டுதான்**

**இருக்கிறார்கள்”[9]**

என நடப்பியல் உண்மையை அங்கதச் சுவையோடு நமக்குப் புரியவைக்கின்றார். புதுக்கவிதையின்

வளர்ச்சியில் பல புதிய வடிவங்கள் வந்துள்ளன. 'ஹைக்கூ' எனும் கவிதை மரபையும் தாண்டி 'சென்ரியு' என்பதாக வளர்ந்து 'குக்கூ' எனப் பயணிக்கின்றது. அப்படியான கவிதைகளிலும் உளவியல் வெளிப்பாடு மேலோங்கி நிற்கிறது.

**"தொகுதிதான்**
**முடிவாகவில்லை**
**தோல்வி முடிவாகி விட்டது**

என்றும்

**ஆயிரம் பேரோடு**
**வேட்பு மனுத் தாக்கல்**
**ஐம்பது வாக்குகளோடு**
**சட்டம் ஒழுங்கினை**
**காப்பாற்ற முடியவில்லை**
**சட்ட சபையில்**

என்றும்

**மழைநாள் கவலை**
**காளான்களை எண்ணுவதா?**
**கட்சிகளை எண்ணுவதா"**[10]

என்றும் அரசியல் அங்கதத்தைப் பதிவு செய்கிறார் மு. மேத்தா அவ்வகையில் அரசியல் பேசும் அப்துல் ரகுமானின் குக்கூ கவிதை,

**"கோரப் புயல்**
**சாய்ந்தன சரிந்தன**
**கோடி மரங்கள்**
**தப்பின**
**சில கொடி மரங்கள்"**[11]

என்பன போன்ற பல கவிதைப் பட்டாசுகளை வெடிக்கச் செய்து புரட்சி செய்கின்றது.

**பா. விஜயின் படைப்பாக்க ஆளுமை**

**"அர்ச்சனை சீட்டுகள் தான்**
**தமிழில் உள்ளனவே தவிர**
**அர்ச்சனைகள் அல்ல**
**சமஸ்கிருதத்தில் பேசினால்தான்**
**சாமிக்கே புரியுமென்று**
**தேவாரம் திருவாசகத்தை**
**பழைய கடைக்கும் போட்டு விட்டான்**

**பக்தித் தமிழன்**
**தொல்காப்பியன் வரை**
**தோண்டி யெடுத்துக் சொல்கிறது**
**தொலைக் காட்சித் தமிழ்**
**தொகுப்பாளிகள் தொண்டையில்**
**தமிழ் தூக்குப் போட்டுத் தொங்க”[12]**

என்பதாக தமிழ், தமிழரால் நிந்திக்கப்பட நடைபெற வேண்டியது பெயர் மாற்றம் மட்டுமல்ல தமிழ் உணர்வு எனும் உயிர் மாற்றம் என்று வலியுறுத்துகிறார். தமிழ் மொழி அமிழ்தம் என்று சொல்பவர்கள் தமிழில் பெயர் வைப்பதில்லை என்ற ஏக்கத்தோடு கவிதை செய்கிறார். தமது கவிதை நூல்களில் தமிழ்மொழி தமிழர் பண்பாடு ஆகியவற்றை அதிகமாகவும் வலுவாகவும் பதிவு செய்கிறார் பா. விஜய்.

**பழநிபாரதியின் படைப்பாக்க ஆளுமை**

**“பேசத் தொடங்கி விட்டோம்**
**எங்கள் வார்த்தைகள்**
**நாறத்தான் செய்யும்**
**வாய் நாற்றமல்ல அது**
**வலுக்கட்டாயமாய் எம்**
**வாய் திறந்து ஊட்டிய**
**உங்கள் ஆணவ மலத்தின்**
**துர்நாற்றம்**
**நாங்கள்**
**உங்கள் நிலங்களை**
**உழுதோம்**
**நீங்கள்**
**எங்கள் பசியை**
**அறுவடை செய்தீர்கள்**
**அந்த நிலமும்**
**எங்களுடையது தானென்பது**
**அப்போது எங்களுக்குத் தெரியாது”[13]**

எனத் தொடர்கின்ற கவிதை, சாதி ரீதியாகவும், இன ரீதியாகவும் அடக்கி கொடுமைகள் செய்யப்பட்ட சமூகத்தின் குரலாக ஒலிக்கின்றது. கவிதையின் வார்த்தைகளும் வலிகளும் சமூகத்தை நோக்கிய பல்வேறு கேள்விகளைக்கேட்டு பதில் சொல்ல முடியாத தவிப்பை உண்டாக்குகின்றன. வெண்மணி படுகொலை, நில அபகரிப்பு, பெண் வன்கொடுமை, தீண்டாமை பெருங்கொடுமை ஆகியவற்றைச் சுட்டி பெருந்துன்பம் அடைந்த அந்த சமூக மக்களின் வாழ்வியலையும் அதிலிருந்து அவர்களை முழுவதுமாக மீட்க வேண்டும் எனும் போர்க்குரலையும் முன் வைக்கின்றன. எழுதப்படிக்கத் தெரியாத

நாங்கள் இப்போது எழுதப்படிக்கத் தொடங்கிவிட்டோம், எழுத்துக்களைக் கூட்டி அல்ல, எங்களையும் கூட்டி எனக் கூட்டாகச் சேர்ந்து அவர்கள் போராடத் துணிந்ததைச் சுட்டி மற்றவர்களையும் போராட விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

**முடிவுரை**

கவிஞர்கள் வாழும் சமூகத்தின் எல்லா கூறுகளையுமே படைப்பில் ஆக்குகிறார்கள். அக்கூறுகளை அவரவர்களின் கவியாக்கம் மனவியல் தன்மை, மொழியாளுமை ஆகியவற்றைக் கொண்டு கவியாக்கித் தந்துள்ளனர்.

எல்லா பாடுபொருள்களுமே சமூக மேம்பாட்டிற்கான அரசியல் திட்டங்களை முன்னெடுப்பவையாகவே உள்ளன. அவற்றின் மூலமாக பல சமூக மாற்றங்கள் நிகழ்வதற்கான தொடக்கங்கள் நிகழ்ந்துள்ளன.

புதிய மாற்றங்களோடு எல்லா மனிதர்களுக்கானதாகவும் எல்லா மனிதர்களையும் உள்ளடக்கிய எளிமையான சாதாரண மனிதர்களின் வாழ்வைப் பேசி, பதிவு செய்து மாறுதல்களை ஏற்படுத்த வேண்டிய பணியைத் தமிழ்ப் புதுக்கவிதைகள் தவறாது செய்து வந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. பாரதியார் கவிதைகள், பாரதியார், ப. 29, 1997, மாணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. பாரதிதாசன் கவிதைகள் , பாரதிதாசன், ப. 65, 1997, மாணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. தமிழ் இலக்கிய வரலாறு, க.கோ வெங்கடராமன், ப. 295, 2006, கலையக வெளியீடு, பரமத்தி வேலூர்.
4. மேலது., ப. 297
5. மேலது., ப. 299
6. மேலது., ப. 299
7. வைரமுத்து கவிதைகள், வைரமுத்து, ப. 112, 2010, சூர்யா லிட்டரேச்சர், சென்னை.
8. தமிழ் இலக்கிய வரலாறு, க.கோ வெங்கடராமன், ப. 301, 2006, கலையக வெளியீடு, பரமத்தி வேலூர்.
9. தமிழ் இலக்கிய வரலாறு, பாக்கியமேரி வெங்கடராமன், ப. 700, 2008, பாவை பதிப்பகம், இராயப்பேட்டை.
10. மேலது., ப. 706
11. தமிழ் இலக்கிய வரலாறு, க.கோ வெங்கடராமன், ப. 304, 2006, கலையக வெளியீடு, பரமத்தி வேலூர்.
12. காகித மரங்கள், பா. விஜய், ப. 52, 2017, குமரன் பதிப்பகம், சென்னை.
13. புறாக்கள் மறைந்த இரவு, பழநிபாரதி, ப. 13, குமரன் பதிப்பகம், சென்னை.